**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.1107/2024**
**Preliminary Register :**
**Police Station : Neelangarai PS**

**Deposition of witness for :PW8/LW9**
**:**

**Name : பாலு**
**:**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.**
**(எதிரிகள் ஆஜர் , எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

அரசு தரப்பு முதல் விசாரணை

1. நான் தற்பொழுது நீலாங்கரை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.07.2024-ம் தேதி பத்து 45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த பொழுது இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் தீபக் ஆண் வயது 19 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 211/2024 சட்ட பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே 11:30 மணி அளவில் சம்பளமும் சென்று

சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சேகர் மற்றும் ஆனந்தன் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகேஜர் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 8 மற்றும்9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான சிவகுமார் மற்றும் பாலகிருஷ்ணனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 12.45 மணி அளவில் சின்ன நீலாங்கரை கடற்கரை அருகே வைத்து தக்க காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் அப்பொழுது அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அசோக் குமார் மற்றும் சந்தோஷ் குமார் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான (என அழைத்துச் சென்றால் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கத்தியை எனது வீட்டில் இருந்து தங்களிடம் ஒப்படைக்கிறேன்) ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.த.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரியின் வீட்டில் இருந்த சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கத்தியை சாட்சிகள் அசோக்குமார் மற்றும் சந்தோஷ் குமார் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது . அவற்றை படிவம் 91 கீழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன் . அந்தப் படிவம் 91 அ.த.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் காயம் பட்ட நபரான நிகழ்நிலை புகார்தாரர் தீபக் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கோபிநாத் என்பவரை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவரிடம் இருந்து விபத்து பதிவேடு மற்றும் காயத் சான்றிதழ் அறிக்கையை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ் அறிக்கை அ.த.சா.ஆ. 13 மற்றும்14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இந்த வழக்கின்

விசாரணை முடித்து எதிரின் மீது சட்ட பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. சம்பவம் நடந்த இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கும் 1.5km ஆகும். சம்பவம் நடந்த இடத்தில் ஒரு கிலோமீட்டர் அருகில் முழு நேர மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு விசாரணைக்கு செல்லும் பொழுது பேப்பர், பென்சில், படிவம் 91, கைப்பற்றுதல் மகஜர் படிவம், தட்டச்சு இயந்திரம், மடிக்கணினி ஆகியவைகளை எடுத்துச் சென்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு காவல்நிலையத்தில் வைத்து தான் பிரிண்ட் எடுத்தேன் என்றால் சரியல்ல. இவை எங்கு பிரிண்ட் செய்யப்பட்டது என்பதை எனது விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அல்லது தற்போது என்னால் சொல்ல முடியுமா என்றால் சம்பவ இடத்திற்கு பிரிண்டர் எடுத்து சென்றதால் அங்கேயே பிரின்ட் எடுத்தேன்.

2. புகார்தாரரின் சகோதரியின் நைட்டியை எரித்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார். அந்த எரிந்த நைட்டியோ அல்லது அதை சாம்பல்களையோ கைப்பற்றினேனா என்றால் எதிரி அந்த நைட்டியை எரித்து தண்ணியை ஊற்றி கலைத்து விட்டார். எதிரி புகார்தாரரின் அக்காவின் நைட்டியை எரித்தார் என்பதற்கு சாட்சியாக புகார் தாரரின் அக்காவை இவ்வழக்கின் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் புகார்தாரரின் அக்காவிடம் கை குழந்தை இருந்ததால் அவர் சாட்சியாக இருக்க ஒப்புக்கொள்ளவில்லை. இவ்வழக்கில் சம்பவ இடத்திற்கும் எதிரி வீட்டிற்கும் 20 மீட்டர் தூரம் இருக்கும். இந்த வழக்கில் உள்ள விசாரணையை நான் நேரடியாக சம்பவ இடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றாலும் அப்படி நேரடியாக சென்று இருந்தால்

வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சிவப்பிரகாஷ் என்பவரை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

3. மேலும் அருகில் உள்ள கோவிந்தன் மற்றும் சுதாகர் என்பவரை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றால் நான் சம்ப இடம் சென்ற பொழுது அந்த சாட்சிகள் யாரும் அப்பொழுது வீட்டில் இல்லை. புகார்தாரரின் தந்தை அந்த கிராமத்தின் பஞ்சாயத்துதாரரில் ஒருவர் என்ற விவரம் எனது விசாரணையில் தெரியவந்தது. புகார்தாரரின் தந்தை கிராமத்து பஞ்சாயத்துதாரரில் ஒரு உறுப்பினர் என்பதால் அந்த செல்வாக்கை பயன்படுத்தி ஒரு பொய்யான புகாரை கொடுத்து அந்த பஞ்சாயத்தின் மற்ற உறுப்பினர்களை வழக்கின் சாட்சிகளாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர்களுக்கு ரத்தம் வந்ததாக குறிப்பிட்டுள்ளார். அந்த ரத்தம் படிந்த சட்டையை இவ்வழக்கில் சான்றாவணமாக சேர்த்துள்ளேன் என்றால் பாதிக்கப்பட்ட நபர் அந்த சட்டையை ஒப்படைக்கவில்லை.

4. இந்த வழக்கின் புகார்தாரர்களுக்கும் எதிரிக்கும் முன்பே விரோதம் இருந்த விவரம் எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் அனைத்து விசாரணைகளும் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்ததால் தான் காவல் நிலையத்தில் வைத்து அனைத்து கோப்புகளும் தயார் செய்ததால் தான் இவ்வழக்கின் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிக்கும் புகார்தாரருக்கும் முன்பகை உள்ளதை தெரிவித்தும் நான் எந்த முன்பகையும் இல்லை என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றாலும் இது எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் ஒப்படைத்துள்ள கத்தி என்பது அனைத்து மீனவர்கள் வீட்டில் இருக்கும் ஒரு பொருள் என்பதால் நான் வழக்கு

சம்பந்தம் இல்லாத ஒன்றை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி அந்த பொருளை அடையாளம் கட்டினார்.

5. ஊர் பஞ்சாயத்துதாரர் என்பதால் கால்நிலையத்திற்கும் அவருக்கும் அதே தொடர்பு உள்ளதால் அவர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று அவருக்கு அனுசரியாக பொய்யான வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் அவர் தந்தையை தவிர மற்றவர்கள் பிறழ் சாட்சியாக மாறி உள்ளதால் இவ்வழக்கு சட்டப்படி நடக்கத்தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல.

**<u>மறுவிசாரணை :</u> இல்லை**

**Sd/–M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதிமன்றம்,**
**சோழிங்கநல்லூர்.**